மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சங்க மரபு கவிதைகளில் மெய்ப்பாட்டியல் – அழுகை

# The Sangha Poetry, Manifest Physical Expression Of The Emotions, Of Eight Kinds, - Weeping

கி. துர்காதேவி / K. Durgadevi[1]
[1]Assistant Professor, Department of Tamil, Vels University, India
Corresponding Email: drdurgabadrinath@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்துடன் தொடர்பு கொள்ளும் மெய்ப்பாடுகளுடன் விளங்குகின்றன. மெய்ப்பாடுகளின் வகை, எண்வகை மெய்ப்பாடுகள், ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், ஏனைத்திணைக்குரிய மெய்ப்பாடுகள், புறனடை என ஐவகையாகப் பிரித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார். தலைவன் தலைவி பண்பு நலன்களில் வெளிப்படும் அழுகை என்னும் மெய்ப்பாடு சங்க அக இலக்கியங்களில் வெளிப்படும் விதத்தினை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம். அழுகை எனும் மெய்ப்பாடு இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என நான்கிடத்தில் தோன்றும் என்பார் தொல்காப்பியர். கலங்குதல், நெகிழ்தல் ஆகிய தன்மைகளால் கண்களில் ஒளி மழுங்குதலும் ஒளிகுறைதலும் ஏற்பட்டு வாட்டம் தோன்றி கண் கலங்கி கண்ணீர் வெளிப்படும். சங்க இலக்கியங்களில் கண்கள் கலங்குவது, அழுவது போன்றவற்றை குறிப்பிட பசப்பு, பசலை, பசத்தல் ஆகியச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. பசலையானது கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால் பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவன் தலைவி இவர்களுக்கிடையே பிரிவு உண்டாகும் போதும், பிரிவின் பின்னும் வெளிப்படும் உணர்வுகளில் அழுகை வெளிப்படுவதை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு போன்ற சங்க இலக்கியப்பாடல்கள்வழி அறியலாம். சங்க மரபுக்கவிதைகளின் எண்வகை மெய்ப்பாடுகளுடள் அழுகை குறித்ததாக இவ்வாய்வு அமையும்.

**கருச்சொற்கள்:** மெய்ப்பாடு, அழுகை, பசப்பு, பசலை, பசத்தல்

**Abstract**

Sangam literature songs are interpreted with truths that communicate with the mind. Tolkappiyar says that the truth of crying appears in the fourth place as disgrace, loss, agitation, and poverty. Due to agitation and flexion, light dimming, and loss of light occurs in the eyes, swelling occurs and the eyes are agitated and tears are released. In the Sangam literature, the words pasappu, pasalai, pasathal have been used to refer to eyes that are troubled and crying. As pasalai is associated with the organ called eye, the words pasalai, pasap, pasthal are used to refer to crying because the eyes are disturbed, and tears come out when those who love them leave. We can understand the crying in the feelings that emerge between the leader and the leader when there is a separation between them and after the separation, through Sangam literature songs such as Naṟṟiṇai, Kuṟuntokai, Aiṅkuṟunūṟu, Kalittokai, Puṟanāṉūṟu etc. Pasalai is a disease caused by the Talaivaṉ division to the Talaivi, as is known from the literature. However, in this article, Pasalai is associated with the organ called eye, so the words Pasalai, Pasal, Pasatal are used to refer to crying because the eyes are troubled and tearful when those who love them leave them. This review will be about crying in the numerical truths of traditional Sangha poems.

Keywords: Sangam literature, Talaivaṉ, Talaivi, Pasalai, Pasal, Pasatal

**முன்னுரை**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்ற தொல்காப்பியத்திற்கு முந்தையனவாக இலக்கண நூல்கள் பல இருந்திருக்கின்றன. செய்யுள் என்னும் கவிதை வடிவம் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுக்காலத் தொன்மையுடையது. இதனை இலக்கண நூல்களில் செய்யுள் தொடர்பான எழுத்து, சொல், அகம்-புறம் என்னும் பாடுபொருள் குறித்த செய்திகளும் யாப்பு, அணி ஆகியன பற்றிய வரையறைகளும் இடம் பெற்றிருப்பதிலிருந்து அறியலாம்.

இறையனார் களவியல் உரையில் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை போன்ற தலைச்சங்க நூல்கள் பற்றியும் கலி, குருகு, வியாழமாலையகவல், வெண்டாளி ஆகிய மறைந்து போன சங்க நூல்களின் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இடைச் சங்க நூல்களும் கடைச் சங்க நூல்களும் அவற்றுள் அடங்கும். 'மறைந்துபோன தமிழ்நூல்கள்' என மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் இவ்வகை நூல்கள் குறித்து எழுதியுள்ளார்.

மரபு என்னும் சொல், தொன்று தொட்டு வரும் தன்மையுடையது என்பதை உணர்த்தி நிற்கின்றது. இலக்கியங்களில் பாடுபொருளும் உத்திகளும் புதியனவாயினும் மரபு இலக்கணத்தின்படி படைக்கப்படுதலின் இவை மரபுக்கவிதை எனப்படுகின்றன. சங்க இலக்கியம், காப்பியங்கள், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள் போன்றவைகள் மரபுக் கவிதைகளால் ஆனவையே ஆகும். சங்க மரபுக் கவிதைகளில் வெளிப்படும் எண்வகை மெய்ப்பாடுகளில் அழுகை எனும் மெய்ப்பாடுப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்துடன் தொடர்பு கொள்ளும் மெய்ப்பாடுகளுடன் விளங்குகின்றன. மெய்ப்பாடுகளின் வகை, எண்வகை மெய்ப்பாடுகள், ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகள், ஏனைத்திணைக்குரிய மெய்ப்பாடுகள், புறனடை என ஐவகையாகப் பிரித்துத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார்.

பேராசிரியர், "மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்" (பேராசிரியர் உரை, செய்யுளியல் முதல் நூற்பா) என்றும் நச்சினார்க்கினியர், "மெய்ப்பாடென்றது சொற்கேட்டார்க்குப் பொருள்கட் புலனாதலை" (நச்சினார்க்கினியர் உரை, தொல். பொருள். செய்யுளி.1) என்றும் தண்டியாசிரியர், "மெய்ப்பாடாவது நேராகக் கண்டதுபோலத் தோன்றும் கருத்து" எனவும் விளக்கமளிக்கின்றனர்.

மெய்ப்பாடு என்பது உடலில் தோன்றும் அசைவுகளே ஆகும். மெய்ப்பாட்டின் பொருளை உணர்வதற்கு ஐம்புலன் உணர்வு இன்றியமையாததாகிறது. ஒன்றைப் பற்றி கூறியவுடனேயே அதன்பொருளை மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பாடாகும்.

> மெய்ப்பட முடிப்பது மெய்ப் பாடாகும் (தொல். 204)

> எண்வகை இயல்நெறி பிழையாதாகி
> முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே (தொல். 205)

என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் மெய்ப்பாட்டியலின் முதல் 12 நூற்பாக்களால் கூறப்படுகின்றன. தொல்காப்பியம் உரைக்கும் மெய்ப்பாடுகள் எட்டு. அவை தோன்றும் இடங்கள் என்று ஒவ்வொன்றும் நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டு அதாவது 32 மெய்ப்பாடுகள் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில்,

> நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
> அப்பா லெட்டாம் மெய்ப்பாடென்ப (தொல்.மெய்.247)

| | | |
|---|---|---|
| நகை | : | எள்ளல், இளமை, பேதமை, மடம் |
| அழுகை | : | இழிவு, இழவு, அசைவு, வறுமை |
| இளிவரல் | : | மூப்பு, பிணி, வருத்தம், மென்மை |
| மருட்கை | : | புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் |
| அச்சம் | : | அணங்கு, விலங்கு, கள்வர், தந்தை, ஆசிரியர் |
| பெருமிதம் | : | கல்வி, தறுகண்மை, புகழ், கொடை |
| வெகுளி | : | உறுப்பறை, குடிகோள், அலை, கொலை |
| உவகை | : | செல்வம் உடைமை, புலன், புணர்வு, இன்ப விளையாட்டு |

இவையாவும் உலகியலில் மிக இயல்பாகத் தோன்றும் மெய்ப்பாடுகளாகக் கருதப்படுகின்றன. தொல்காப்பியம் தவிர பிற இலக்கணங்களிலும் மெய்ப்பாடு குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அகப்பொருள் விளக்கத்தில்,

> திணையே கைகோள் கூற்றே கேட்போர்
> மெய்பாடு எச்சம் பொருள்வகை துறைஎன்று
> அப்பால் ஆறிரண்டு அகப்பாட்டுறுப்பே (அகப்பொருள் விளக்கம் 211)

என அகப்பாட்டுறுப்புப் பன்னிரெண்டு என்றும் அதில் மெய்பாடும் ஒன்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறையனார் அகப்பொருளில்,

> திணையே கைகோள் கூற்றே கேட்போர்
> இடனே காலம் எச்சம் மெய்ப்பாடு
> பயனே கோள் என்று ஆங்கப்பத்தே
> அகத்திணையும் உரைத்தலாறே (இறை.அகப்.56)

என்று அகப்பாட்டுறுப்பு பத்து என்கிறது.

தொன்னூல் விளக்கத்தில்,

அவையணி என்ப கடுஞ்சினம் காமம்
வியப்பு அவலம் இழிவு அச்சம் வீரம் நகை என
எண் மெய்ப்பாட்டை உண்ர்த்தித் தோற்றலே (தொன். விளக்.354)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகப்பாடல்களில் வரும் தலைமை மாந்தர்களிடம் நிகழும் மெய்ப்பாடுகளை விளக்கிச் சொல்வதற்கு அவர்களின் பண்பு நலன்களையும் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல். மெய்ப். 35)

திருக்குறளில்,

தலைவியின் மெய்ப்பாடுகளையும் அவை கண்ட தலைவனது கூற்றுக்களையும் கொண்டு தலைவன் தலைவியர் உளநிலை உணர்ச்சிகளைக் கொண்டு வள்ளுவர் குறிப்பறிதல் எனும் அதிகாரத்தைப் படைத்திருக்கிறார் எனலாம்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் (குறள்.706)

தன் அருகே இருக்கும் பொருளைக் காட்டும் பளிங்கினைப் போல் ஒருவரது மனத்தே நிகழ்வதை அவரது முகம் காட்டும்.

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றதுணர் வார்ப் பெறின் (குறள்.708)

ஒருவனுடைய முகம் பார்த்து அவன் மனதிலுள்ளவற்றைக் குறிப்பால் உணரக்கூடியவர் உடனிருந்தால் அவர் முகம் நோக்கி நிற்றல் ஒன்றே அவனுக்கு போதும்.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின் (குறள்.709)

உள்ளம் நினைப்பதைக் கண்காட்டும்; எதிரில் உள்ளவர் பகைமை கொண்டவரா அல்லது நட்புள்ளம் கொண்டவரா என்பதை அவர் கண்களை நோக்கியே கண்களின் வகைமை அறிந்தவர்களால் கூறமுடியும். என வரும் திருக்குறள்கள் மெய்ப்பாட்டை உணர்த்துகின்றன.

கண்கள் பசக்கும் பொழுது கண்களில் இருந்து கண்ணீர் பெருகுவதைத் திருக்குறள் கூறுகிறது.

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண் (குறள்.1232)

பசலை நிறம் அடைந்து நீர் சொரியும் கண்கள், நாம் விரும்பிய காதலர் நமக்கு அன்பு செய்யாத தன்மையைச் சொல்வன போல் உள்ளன.

**மெய்ப்பாடுகளில் அழுகை**

அழுகை என்பது ஒரு வெளிப்பாடு; மகிழ்ச்சியைப் போல வருத்தம் என்பது ஓர் உணர்ச்சி. மகிழ்ச்சியை வெளிப்படுத்த பல வழிகள் இருப்பது போல வருத்தத்தை வெளிக்காட்ட பல வெளிப்பாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் அழுகை.

கண்ணீர் விட்டு துன்ப உணர்வை வெளிப்படுத்துதல் தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ள எட்டு வகையான மெய்ப்பாடுகளுள் ஒன்றான அழுகை எனும் மெய்ப்பாடு ஆகும். மகிழ்ச்சியாக இருந்தாலும், மனவருத்தமாக இருந்தாலும் வெளிப்படும் இந்த உணர்வினை வார்த்தைகளற்ற உணர்வின் மொழி என்றும் கூறலாம்.

மனிதன் தன்னைக் கண்டெடுப்பது சோகத்தில்தான். ஆங்கிலக் கவிஞர் பிரான்சிஸ் தாம்சன் ‘கண்ணீரால் கழுவப்பட்ட கண்களுக்குத்தான் புனித தரிசனங்கள் கிடைக்கும்’ என்கிறார். அழுவதால் வலி குறைந்து வருத்தம் தளர்ந்து மன இறுக்கமும் குறைகிறது. மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோன்களை அழுகை கரைப்பதால் மனம் இலகுவாகிறது.

ஆன்மிகத்தில்கூட அழுகை குறித்த செய்திகள் நிரம்ப உண்டு. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' உருகி அழுதால் இறைவனைப் அடையலாம் என்று, நம்மை மூன்றாம் திருமுறையில் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஆற்றுப்படுத்துகிறார்.

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

’அல்லற்பட்டு ஆற்றாத கண்ணீர்’ என்று திருவள்ளுவர் சொல்வது துன்பத்தின் வெளிப்பாடுதான். கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்களும் 'தட்டாதே திறந்திருக்கிறது' என்ற நூலில் ‘கண்ணீர் உப்பு கலக்காவிட்டால் வாழ்க்கை சுவைக்காது’ எனவே அழுங்கள் அது நல்லது என்று கூறியுள்ளார்.

பிரிவுத்துயரம் அழவைப்பதைப் போலவே சேரும்போதும் அழத்தோன்றுவதும் மரபு. இந்த மெல்லிய உணர்வையும், மகத்தான மகிழ்வையும் கண்ணதாசன் “பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும்போது அழுதால் கொஞ்சம் நிம்மதி” என்று மிக அழகாக கூறியிருப்பார்.

சங்க இலக்கியப் பாடல்கள் மனத்தால் தொடர்புகொள்ளும் மெய்ப்பாடுகளைக் கொண்டவைகளாகும். தலைவன் தலைவி பண்பு நலன்களில் வெளிப்படும் அழுகை என்னும் மெய்ப்பாடு சங்க அக இலக்கியங்களில் வெளிப்படும் விதத்தினைக் காண்போம்.

அழுகை எனும் மெய்ப்பாடு இழிவும், இழத்தலும், அசைதலும், வறுமையும் என நான்கிடத்தில் தோன்றும் என்பார் தொல்காப்பியர்.

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகைநான்கே (தொல்.மெய். 249)

**இழிவு**

இழிவு என்னும் மெய்ப்பாட்டு நிலைக்களன் பிறரால் இகழப்பட்டு எளியராதலாகிய தாழ்வு நிலையைக் குறிப்பதாக வரும். பொருள் தொலைத்தவர்களுக்கும், பொருள் இல்லாதவர்களுக்கும், இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் இல்லை என்றும் கூறி வந்தவர்களுக்கும் சிறிதும் பொருள் கொடாதிருத்தல் இளிவானதாகும் என்கிறது இப்பாடல் வரிகள். பிறரிடம் தனக்கு உதவி செய்யும்படி கேட்பது ஒருவரின் தாழ்வு நிலையாகும். இப்பாடலில் உதவி கேட்பவரின் தாழ்வு நிலையையும், உதவி செய்யாமல் இருப்போரின் தாழ்வு நிலையையும் சுட்டிக்காட்டுகிறது.

> தொலைவுஆகி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:11)
> இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:75)
> இடன்இன்றி, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு (கலி:2:19)

**இழவு**

தாய், தந்தை முதலிய சுற்றத்தாரையும், பொருளையும் இழத்தல் இழவு என்னும் மெய்ப்பாட்டு நிலைக்களனைக் கொண்டது. குற்றமுடையவன் அவனுடைய செல்வங்களை இழப்பான் என்பதை,

> தப்பித்தான், பொருளே போல், தமியவே தேயுமால்,
> ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான், மற்றுஅவன்
> எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடாதே காண்
> கேளிர்கள் நெஞ்சு அழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
> தாள் இலான் குடியே போல், தமியவே தேயுமால (கலி:149:5-9)

இப்பாடல் எடுத்துரைக்கிறது.

**அசைவு**

அசைவு என்பது முந்தைய நல்ல நிலை கெட்டு தன்னிலை தாழ்தலை விளக்குகிறது. தலைவியின் பழைய அழகெல்லாம் கெட்டு நிலவின் நிறைவு தேய்வதைப் போல, நாள்தோறும் நிலைகெட்டு தேய்வதை,

> தொல் எழில் தொலைவு இவள் துயர் உழப்ப, துறந்து நீ
> வல்வினை வயக்குதல் வலித்திமன், வலிப்பளவை
> நீள் கதிர் அவிர்மதி நிறைவு போல் நிலையாது
> நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் உடன் நிலையுமே? (கலி:17:5-8)

என்ற பாடல் வரிகளால் அசைவு என்னும் மெய்ப்பாட்டின் மூலம் தெளிவுபடுத்துகிறது.

**வறுமை**

வறுமையைக் கூறுமிடத்து இல்லாமையை குறிப்பதாக வருகிறது. வறுமைக் காலத்தும் தலைவன் தலைவியும் ஒன்றிக்கலந்து பிரியாது வாழும் வாழ்வினை சிறந்த இல்வாழ்க்கையாக குறிப்பிட்டுள்ளது.

இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உள நாள்,
ஒரோஒ கை தம்முள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன் கூறுஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை (கலி:18:7-11)

இதில் வறுமை என்னும் மெய்ப்பாட்டுப்பொருள் அமைந்துள்ளது.

**கண்ணீர்**

கலங்குதல், நெகிழ்தல் ஆகிய தன்மைகளால் கண்களில் ஒளி மழுங்குதலும் ஒளிகுறைதலும் ஏற்பட்டு வாட்டம் தோன்றி கண் கலங்கி கண்ணீர் வெளிப்படும்.

பசப்பு, பசலை, பசத்தல் ஆகியச் சொற்கள் சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. இச்சொற்கள் கண்கள் கலங்குவதையும், அழுவதையும் குறிக்கின்றன. பசலையானது கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால் பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாக சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைவன் தலைவி இவர்களுக்கிடையே பிரிவு உண்டாகும் போதும், பிரிவின் பின்னும் வெளிப்படும் உணர்வுகளில் அழுகை வெளிப்படுவதை சங்க இலக்கியப்பாடல்கள்வழி அறியலாம்.

நற்றிணையில்,

சிறுமெல் ஆகம் பெரும்பசப்பு ஊர (358-2)

அடு பால் அன்ன என் பசலை மெய்யே (175-9)

காய்ச்சும் பாலின் மேல் தோன்றும் ஆடையினைப் போலக் கண்களின் மேல் கண்ணீரானது தோன்றுவதாக கூறப்பட்டுள்ளது.

காமம் கொல் இவள் கண் பசந்ததுவே (35-12)

குறுந்தொகையில்,

பசலை ஆர்ந்தன குவளையங் கண்ணே (குறு-13)

ஐங்குறுநூற்றில்,

என் செய்ய பசக்கும் தோழி என் கண்ணே (169)
ஏதிலார்க்குப் பசந்த என் கண்ணே (34)
கொன்றைப் பூவின் பசந்த உண்கண் (50)
ஆய்மலர் உண்கண் பசப்ப (242)
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய் (21)

பசப்பு அனிந்தனவால் மகிழ்ந்த என் கண்ணே (45)

பல்தழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ (170)

நயந்தோர் உண்கண் பசந்து பனிமல்க (37)

பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை (366)

கலித்தொகையில்,

பசக்குவ மன்னோ என் நெய்தல் மலர் அன்ன கண் (142)

பொன்எனப் பசந்த கண்போது எழில்நலம் செல (77)

பல்இதழ் மலர் உண்கண் பசப்ப (45)

அரிமதர் உண்கண் பசப்ப (82)

ஆய் இதழ் உண்கண் பசப்ப (112)

பாடு இன்றி பசந்த கண் பைதல பனிமல்க (16)

அகநானூற்றில்,

ஆய் மலர் உண்கண் பசலை (52)

புறநானூற்றில்,

பூப்போல் உண்கண் பசந்த (96)

சிந்தாமணியில்,

'பனிகொள் மாமதி போல் பசப்பு ஊர யான்'

நிலவினை மேகங்கள் அடிக்கடி மூடி மறைப்பதும் பின்னர் அம் மறைப்பு விலகுவதும் போல பெண் தனது துயரத்தை நினைத்து நினைத்து வருந்தி அழும்போது கண்ணீர் பெருகிக் கண்ணை மறைப்பதும் விலகுவதுமாக உள்ளது என திருத்தக்கத்தேவர் கூறியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் அழுகை, கண்ணீர் ஆகிய பொருளில் பயன்பாட்டில் இருந்த பசப்பு என்ற சொல் கன்னடத்தில் “வடிதல்” என்ற பொது பொருளில் பயன்படுத்தப்படுகிறது. கண்ணில் இருந்து நீர் வடிதலைக் ”கண்ணிரு பசத்தே' என்று கூறுவர்.

அடிக்கடி கண்ணீர் விடும் பெண்ணை கிராமப்புரங்களில் இன்றும் பசப்புக்காரி என்ற சொல்லால் பயன்படுத்துவதை அறியலாம். பசலை என்பது தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் நோய் என்பது இலக்கியங்களால் அறியப்படுவது. எனினும் இந்த கட்டுரையில், பசலையானது, கண் என்னும் உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளதால் தம்மீது அன்பு கொண்டவர்கள் தம்மைவிட்டுப் பிரியும்பொழுது கண்கள் கலங்கி கண்ணீர் வருவதால்

பசலை, பசப்பு, பசத்தல் என்ற சொற்கள் அழுகையைக் குறிப்பதாக பயன் படுத்தப்பட்டுள்ளன.

## நிறைவுரை

சங்க மரபு கவிதைகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகளில் “அழுகை” எனும் மெய்ப்பாடு பெற்றுள்ள இடத்தினையும் அதற்கான காரணங்களையும் சங்க இலக்கியங்களில் பசப்பு என்ற சொல் அழுகையை பிரிவினால் வரும் கண்ணீரைக் குறிப்பதையும் சான்றுடன் அறிய முடிகிறது.

கருணை, கண்ணியம், கரிசனம் ஆகியவற்றின் அடையாளம் தான் கண்ணீர். நமது துயரமும், வலியும் நம்மை அழச் செய்வது போல அடுத்தவர் துயரிலும், துன்பத்திலும் நாம் வாட வேண்டும். பொதுவாக இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுபவர்களில் கவிஞர்களே முதலிடம் பெறுவர். 'என் கண்ணீரைத்தான் நீங்கள் கவிதை என்கிறீர்கள்' என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

தன்வலி, தன்துயரம், தனதுசோகம், தனது இழப்பு, தனது தோல்விக்காக நாம் அழவேண்டும். அவ்வாறு அழுவது மனதுக்கு இதம் தரும். அது போலவே நாம் அடுத்தவருக்காகவும் கொஞ்சம் அழவேண்டும். அடுத்தவரின் வலி, துயரம், இழப்பு முதலியவையும் நம்மை அழச் செய்யவேண்டும். நாம் நமக்காக அழும்போது நம் மனம் இலேசாகி இதம் பெறும். அதைவிட நாம் அடுத்தவருக்காக அழும்போது மானுடம் மாண்புறும்.

## துணைநூற்பட்டியல்


இராசமாணிக்கனார்.மா., தமிழ்மொழி-இலக்கிய வரலாறு, சங்ககாலம், பூங்கொடி பதிப்பகம், 1963

கனம். ஜி. மெக்கென்ஜி காபன் அய்யர், தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும், இரண்டாம் பதிப்பு, அர்ச்.சூசையப்பர் அச்சுக்கூடம், 1891.

சோமசுந்தரனார். பொ.வே., ஐங்குறுநூறு, கழகம், 1961

தொல்காப்பியம் பொருளதிகாரம், ச.பவானந்தம் பிள்ளை, 1917.

நமச்சிவாய முதலியார், கா., இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள், சி.ஆர்.என் & சன்ஸ், 1943.

வெள்ளைவாரணன். க., தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986.